தனித்தமிழ்
சிறுவர்
திங்களிதழ்

# தமிழ்ச்சிட்டு

## முன்னேறு!

முன்னேறு முன்னேறு ஏறுமுன் னேறு!
முழுமூச்சி னோடிறுதி வரையில் முன்னேறு!
எந்நாளும் குறையாத தளராத ஊக்கம்,
ஏறுநடை கொண்டுமுன் னேறுமுன் னேறு!

பன்னூலைக் கற்றுமுன் னேறுமுன் னேறு!
பலதொழிலைக் கற்றுமுன் னேறுமுன் னேறு!
தன்னுணர்வு கொண்டுமுன் னேறுமுன் ஏறு;
தளராத உள்ளத்தி னோடுமுன் னேறு!

வருகின்ற எதிர்ப்புக்கஞ் சாதுமுன் னேறு!
வாய்மையினை உள்ளத்திற் கொண்டுமுன் னேறு!
பெறுகின்ற தோல்விக்கஞ் சாதுமுன் னேறு;
பேருணர்வை எண்ணிமுன் னேறுமுன் னேறு!

நடையில்முன் னேறு;முன் னேறுசெந் தமிழில்!
நட்பில்முன் னேறு;முன் னேறுதாய் அன்பில்;
கொடையில்முன் னேறுமுன் னேறுவிருந் தோம்பில்;
குறுகுமனப் பான்மைவிட் டேறுமுன் னேறு!

அறிவில்முன் னேறுநல் வினையில்முன் னேறே!
அழகில்முன் னேறுநற் கலையில்முன் னேறு;
பொறையில்முன் னேறுகைத் தொழிலில் முன்னேறு!
போக்கில்முன் னேறுநல் நோக்கில் முன்னேறு;

உண்மையைப் பற்றிமுன் னேறுமுன் னேறு!
உழைப்பினைக் கொண்டுமுன் னேறுமுன் னேறு!
பெண்மையைப் போற்றிமுன் னேறுமுன் னேறு!
பேய்மையை வீழ்த்திமுன் னேறுமுன் னேறு!

குரல்: 4.
இசை: 1



விலை
25 காசு

# மழை!

வானம் கருத்தது;
முகிலும் பொழிந்தது;
மழை! மழை! மழை!
மேனி நனைந்தது!
குளங்கள் நிறைந்தன!
மழை! மழை! மழை!

மின்னல் கீற்றுகள்!
இடிமுழக் கங்கள்!
மழை! மழை! மழை!
இன்னல் தீர்ந்தது!
எங்கும் குளிர்ந்தது!
மழை! மழை! மழை!

மப்பு! மந் தாரம்!
மஞ்சின் மூட்டம்!
மழை! மழை! மழை!
தொப்பரை யாய்உடை
முற்றும் நனைந்தது!
மழை! மழை! மழை!

உரித்த நுங்குபோல்
ஒளிமழுங் கியது;
மழை! மழை! மழை!
பொரித்திடு கறிபோல்
சளசள ஓசை!
மழை! மழை! மழை!

இறங்கிய நீர்ச்சரம்
ஏழையின் கண்ணீர்!
மழை! மழை! மழை!
உறங்கிய உலகம்
உயிர்த்தொளி பெற்றது;
மழை! மழை! மழை!

-துரை-மாணிக்கம்-




# தமிழ்ச்சிட்டு

தனித்தமிழ்
சிறுவர் கலை இதழ்


இன்றைய பயனே நேற்றைய உழைப்பு!
இன்றைய சிறுவர் நாளைய உலகம்!
நன்று செய்வதே நமக்குநல் வாழ்க்கை!
என்றும் அழியாது இருப்பது புகழே!


குரல்-4 | தி. பி. உ000-மடங்கல்-ஆகச்டு-செப்டம்பர்–69 | இசை-1


## வீட்டு நூலகம்-2

தம்பி, ஒவ்வொரு வீட்டிலும் சிறு அளவிலாகிலும் ஒவ்வொரு நூலகம் இருத்தல் வேண்டும் என்பது பற்றியும், அதன் தேவை பற்றியும் சென்ற உரையில் கூறினேன் இல்லையா? இந்த உரையில் அது பற்றி மேலும் சிலவற்றைத் தெரிந்துகொள்.

படித்த சில பொத்தகங்களையும் அவ்வப்பொழுது கிடைத்த காசு கொண்டு வாங்கிய நல்ல பொத்தகங்களையும் சேர்த்தபின், என்ன செய்ய வேண்டும் தெரியுமா? முதலில் அந்நூல்களுள் கிழிந்து போனவை, அழுக்கடைந்த அட்டை உடையவை, கட்டுத் தளர்ந்தவை, ஓரம் மடங்கியவை முதலியவற்றைப் பிரித்தெடுத்துச் செப்பம் செய்தல் வேண்டும். கிழிந்துபோன தாள்களை நலுங்காமல் சரிவர ஒட்டியும், அழுக்கடைந்த அட்டைகளை நீக்கி வேறு புதிய மொத்தமான அட்டைகளைப் போர்த்தியும், ஓரம் மடங்கியவற்றை ஈரத்துணி கொண்டு நீவி மடிப்பை விரித்தும், கட்டுத் தளர்ந்தவற்றை அழகிய கட்டடம் செய்தும்


வெளியீட்டாளர், பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரன்
தென்மொழி மின் அச்சகம், கடலூர் 1.

நூல்களை ஒழுங்குபடுத்துதல் வேண்டும். புதிய நூல்களை அப்படியே வைத்து விடாதே! மண்வண்ணத்தாள் அல்லது மரவண்ணத்தாள் கடைகளில் விற்குமே, அதனை வாங்கி அட்டை போர்த்திவை. பழைய பொத்தகங்களைப் பழுது பார்க்காமல் இருப்பின், அவற்றை எடுக்கவும் விரிக்கவும் வைக்கவும் நேர்கின்ற பொழுதில் அவை மீண்டும் மீண்டும் கிழிந்து போகலாம். புதிய நூல்கள் உடனே கிடைக்கும்; சில பழைய நூல்கள் அப்படி எங்கும் கிடைத்துவிடா. மேலும் இல்லாதவற்றைத் தேடுவதைவிட இருப்பதைக் காப்பதே மிகவும் நல்லது. உங்கள் ஊரிலோ அல்லது சென்னை போன்ற பெரிய நகரங்களிலோ பழைய பொத்தகக்கடைகள் இருக்கும். அவற்றில் சில அரிய பழைய நூல்கள் சீந்துவாரற்றுக் கிடக்கும். அவற்றை எங்கெங்கோ தேடியிருப்போம்; கிடைத்திரா. அவற்றின் மதிப்பையும் அக் கடைக்காரர் அறிந்திருக்க மாட்டார் அப்படிப்பட்ட பழைய நூல்கள் எப்படிப்பட்ட புதிய நூல்களையும்விட மிகவும் உயர்ந்தவையாகும். காசு கிடைத்தால் கண்ணில்படும் பழைய பொத்தகக் கடைகளை வறிதே தாண்டிவிட்டுப் போய் விடக் கூடாது. அவற்றுள் நுழைந்து நமக்குத் தேவையான, அல்லது தேடிக்கொண்டிருக்கின்ற நூல்களில் ஏதாவது ஒன்றோ இரண்டோ தூசி படிந்து கிடக்கின்றனவா என்று பார்த்தல் வேண்டும். கிடைத்தால் விடக்கூடாது. நயமாகப் பேசிக் குறைந்த விலைக்கு வாங்கிவிடலாம். முன்னோ பின்னோ ஓரிரு பக்கங்கள் கிழிந்திருந்தாலும், தாழ்வில்லை. அவற்றை உடனே வாங்கி விடுதல் நல்லது. பிறகு சரிசெய்து கொள்ளலாம்.

இவ்வாறு படித்தனவும் வாங்கிச் சேர்த்தனவும் பழுது பார்த்தனவுமாய் ஏறத்தாழ நூறு, இருநூறு அல்லது அவற்றுக்குமேல் திரண்ட பின், அவற்றைத் தரவாரியாகப் பிரித்துக்கொள்ளுதல் வேண்டும். இலக்கண இலக்கிய நூல்கள், அறநெறி நூல்கள், இலக்கியத்துள்ளும் கழகக்கால இலக்கியங்கள், பிற்கால இலக்கியங்கள், வரலாறுகள், அறிவியல்கள், பாடல்கள், கட்டுரைகள், வழிச்செலவு நூல்கள், வரலாற்றுள்ளும் அரசு வரலாறுகள், அறிஞர் வரலாறுகள், அறிவியலுள் நிலநூல், வானநூல், வேதியல், விளங்கியல் முதலிய பலவகை நூற்களையும் தனித்தனியாகப் பிரித்து அவற்றை முறையாக வரிசைப் படுத்துதல் வேண்டும். இவ்வரிசை காலத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கலாம். இந்த வகையிலேயே ஆங்கில நூற்களையும் பகுத்தல் வேண்டும்.

நூல்களைத் தரவாரியாகவும், முறையாகவும் பிரித்துக்கொண்ட பின் அவை ஒவ்வொரு பிரிவிற்கும் ஓர் எண்வரிசை கொடு. அந்த

எண்களைச் சொல்லிய மட்டிலேயே அந்த நூலின் வகையைத் தெரிந்து கொள்ளும்படி இருத்தல் வேண்டும். எடுத்துக்காட்டாக இலக்கண நூற்களுக்கு இண-1, இண-2, இண-3 எனவும்; இலக்கிய நூற்களுக்கு இய-1, இய-2, இய-3 எனவும், அறிவியல் நூற்களுக்கு அறி-1, அறி-2, அறி-3 எனவும் தரங்களின் வகைகளுக்கேற்ப முன்னெழுத்துகளைச் சேர்த்து எண்வரிசை இருத்தல் வேண்டும். இவ்வாறு பிரித்து வரிசை எண் இட்டபின் ஒரு பெயரேட்டுச் சுவடியில் தொகைகளின் அளவிற்கேற்பப் பக்கங்களை ஒதுக்கி, ஒவ்வோர் ஒதுக்கத்திலும் ஒவ்வொரு நூல்வரிசைகளை எண் முறையாகக் குறித்துக்கொள். இந்தப் பெயரேட்டுச் சுவடியின் ஒவ்வொரு பக்கத்தையும் இன எண், வரிசை எண், நூலின் பெயர், ஆசிரியர் பெயர், வெளியீடு, விலை, நூல் விளக்கம் முதலிய விளக்கங்களைக் குறிக்கும் அளவிற்குத் தக்கபடி களங்களமாகப் பிரித்துக்கொள்ளுதல் வேண்டும். ஒவ்வொரு நூலின்மேல் இடப்புற மூலையிலும், முதுகின் மேற்புறத்திலும் வரிசை எண்கள் குறிக்கப் பெறுதல் வேண்டும். இவற்றைக் குறிக்கத் துண்டுத் தாள்களை ஒரே அளவினவாக வெட்டிப் பயன்படுத்தலாம். இந்த எண் வரிசைப்படி நூல்களைப் பேழையில் அடுக்கி வைத்துக்கொள்ளலாம். பேழையில்லாத நிலையில், தற்காலிகமாகப் பெட்டியிலும் விசிப்பலகைமேலும் வைத்துக் கொள்ளலாம். ஆனாலும் பேழை வாங்குதல் கட்டாயம். நம்மிடமுள்ள விலைமதிப்பற்ற நூல்களைச் சரியான முறையில் காத்து வைப்பதே மிகவும் அறிவுடைமையாகும். சேர்ப்பதினும் காப்பதே சிறந்தது. பேழையை முழு அளவாகச் செய்ய வியலாத நிலையில் அரையளவாகவும் கால்அளவாகவும் நூல்களின் எண்ணிக்கைக்குத் தக்கபடி செய்து கொள்ளலாம்.

இனி, நூல்களைப் பிறர் படிக்கவும் தரலாம். சிலர் தம்முடைய நூல்களை ஒருவர்க்கும் படிக்கத்தரார். படிக்கக் கொடுக்கும் நூல்களைப் பலரும் திருப்பிக் கொடுப்பதில்லை என்பதால்தான் அவர்கள் படிக்கக் கொடுக்கத் தயங்குகின்றனர். படிக்கக் கொடுத்தவர்க்கும் நூலை யாருக்குக் கொடுத்தோம், எப்பொழுது கொடுத்தோம், என்னென்ன நூல்களைக் கொடுத்தோம் என்று நினைவில் இருப்பதில்லை. இந்தத் தொல்லைகளெல்லாம் இயல்பே. இவற்றிற்காகச் சேர்த்து வைத்த நூற்களை ஒருவர்க்கும் கொடுத்தல் கூடாது என்பது ஒருவகைத் திருட்டுத்தனமே. நம்மிடம் உள்ள பொருள்களும், அவற்றின் பயன்களும் நமக்கும் நம்மைச் சார்ந்தவர்களுக்குமே சொந்தம் என்றெண்ணும் தந்நல மனப்பான்மை ஒழிய வேண்டும். நாம் ஈட்டிய செல்வத்தைப் பிறர்க்கும் ஈத்து உவக்கும் பொதுநல உணர்வு நம்மிடையே மலர்தல் வேண்டும். மாந்தன் நிலாவை எட்டிப் பிடித்த இந்த அறிவியல் காலத்

திலும்கூட இந்த மனமலர்ச்சி ஏற்படவில்லையானால் இந்த மாந்த இனம் உயர்ந்தது என்று பீற்றிக்கொள்வது வீண் பிதற்றலாகவே போகும். இப்படிக் கூறிக்கொள்வதற்கு நாம் வெட்கப்படுதல் வேண்டும். எனவே, தம்பி, உன் நூலகத்து நூல்களை எல்லார்க்கும் படிக்கக்கொடு. அதுமட்டுமன்று; படிக்கக் கேட்பவர்க்கு என்னென்ன நூல்கள் தேவை என்பதை ஓரளவறிந்து அவற்றை முறையாகப் படிக்கக் கூறிக் கொடு.

கொடுக்கின்ற நூற்களைத் தனியாக ஒரு பெயரேட்டில் பதிந்து கொள். கொடுக்கின்ற நூலின் எண், பெயர், வாங்கிச் செல்கின்றவர் பெயர், முகவரி, கொடுக்கின்ற நாள், வந்து சேரவேண்டிய நாள், எடுத்துப் போகின்றவரின் கையொப்பம் முதலிய விளக்கங்களுக்கும், நூல் வந்து சேர்ந்த நாளைக் குறிப்பதற்கும் தேவையான அளவில் தனித்தனியான களங்களை அப்பெயரேட்டில் இடு, நூற்களை உன் நண்பர்களுக்குக் கொடுக்கையில் அப்பெயரேட்டில் முறைப்படி பதிந்துவா. இவ்வகையில் சோம்பல் கூடாது. இம் முறை இருவர்க்கும் நல்லது. விளைந்த விளைவு எல்லார்க்கும் பயன் கொடுக்கின்ற தன்மையில் இருந்தால்தான் உலகம் உலகமாக இருக்கும். இல்லையானால் இவ்வுலகம் இல்லாமற் போவதே நல்லது இல்லையா? தம்பி, வீட்டு நூலகத்தைப் பற்றி இவ்வளவு போதும் என்று கருதுகின்றேன். இவற்றை விடாமற் கடைப்பிடித்து எதிர்காலத்தில் நல்ல ஒரு குடிமகனாக நீ திகழ வேண்டும் என்பதில் எனக்குக் கொள்ளை ஆவல்.

-பெருஞ்சித்திரன்.

# சீனப் பெருஞ்சுவர்.

நாற்றமிகு—செம்பியன்.

சீன நாட்டைச் சுற்றியுள்ள சுவர் 'சீனப் பெருஞ் சுவர்' எனப் படுகிறது. உலகிலேயே மிக நீளமான சுவர் 'சீனப்பெருஞ் சுவர்'தான். இதன் நீளம் 1 500 கற்கள். ஆனால் 10,000 கற்கள் நீளம் உடையது என்று கூறுகின்றனர். அஃது உண்மையில்லை.

இச்சுவரின் அகலம் 28 அடிகள். இது கிறித்து பிறப்பதற்கு 200 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டது. இதைக் கட்டிய அரசன் ''சிக்-வாங்தி'' என்ற பெயருடையவன்.

இச்சுவரைக் கட்டச் சீன முழுவதிலும் வாழ்ந்த ஆண்களில் மூன்றில் ஒரு பகுதியினர் வேலையாட்களாகப் பயன்படுத்தப் பெற்றனர். தண்டம் பெற்ற குற்றவாளிகளும் சுவர்கட்ட அனுப்பப்பட்டனர்.

# பிற இந்திய மொழிகளில் கிழமைகளின் பெயர்கள்.

| தமிழ் மலையாளம் | தெலுங்கு | இந்தி | கன்னடம் | குசராத்தி (அல்) மராட்டி | வங்காளி | பார்சி (அல்) அரபி | பர்மி |
|---|---|---|---|---|---|---|---|
| ஞாயிறு | ஆதிவாரம் | ரவிவார் | ஆதித்தவார | ஆதித்வார் | ரபிவார் | ஏக்-ஷம்பா | த-நேன்- |
| திங்கள் | சோமவாரம் | சோமவார் | சோமவார | சோமவார் | ஷோம்வார் | தே-ஷம்பா | கன்வே |
| செவ்வாய் | மங்கலவாரம் | மங்கல்வார் | மங்கலவார | மங்கல்வார் | மங்கல்வார் | சே-ஷம்பா | த-நேன்-லா |
| அறிவன் (புதன்) | புதவாரம் | புதவார் | புதவார | புதவார் | புதவார் | சார்-ஷம்பா | எங்கா |
| | | | | | | | பூ(b)டு-டா- |
| வியாழன் | குருவாரம் | குருவார் | பிரஹஸ்பதி வார | பிரஹஸ்பதி வார் | பிரஹஸ்பதி வார் | பாஞ்ச்-ஷம்பா | ஹூ |
| வெள்ளி | சுக்கரவாரம் | சுக்கரவார் | | | | ஜிம்மா | க்யா-தா-படே |
| காரி (சனி) | சனிவாரம் | சனிவார் | சுக்கரவார | சுக்ரவார | சுவெக்ரபார் | ஷம்பா | தெளவூக்- |
| | | | சனிவார | சனிவார் | ஷனிவார் | | கியா |
| | | | | | | | த்ஸா-நே |

# வாழ்க்கையில் முன்னேற இராக்பெல்லரின் பத்துகொள்கைகள்.

1. எப்பொழுதும் வெற்றிப்பாதையை நோக்கியே செல்லுங்கள். 2. உண்மையாகவும் நம்பிக்கையுடனும் இருங்கள். 3. மனத்தைத் தளர விடாதீர்கள். 4. உண்மையையே கடைப்பிடியுங்கள். 5. நீங்கள் இல்லாவிட்டால், தொழிலுக்குப் பெருத்த இழப்பு என்று எண்ணும்படியாகத் திறமையாக வேலைசெய்யுங்கள். 6. சிறு பணியில் சேர்ந்து பெரிய பதவிக்கு வரவேண்டும் என்று எண்ணி உழையுங்கள். 7. பிறர், உங்களிடம் எதிர்பார்ப்பதைவிட மிகுதியாகச் செய்யுங்கள். 8. செய்யும் தொழிலைப்பற்றி நன்றாக அறிந்துகொண்டு ஈடுபடுங்கள். 9. உடல்வருந்தி வேலை செய்யாவிட்டால், வாழ்க்கையில் மகிழ்ச்சியே காண முடியாது. 10 விளையாட்டுகளில் மனத்தை ஓடவிடக் கூடாது.

தொகுப்பு: சு. முருகபூபதி, மகுடஞ்சாவடி.

# பிற மொழிகளில் மாதங்கள்.

| தமிழ் | மலையாளம் | தெலுங்கு | கன்னடம் | இந்தி | குசராத்தி அல்லது மராட்டி | வங்காளி | பார்சி (அல்) அரபி | ஆங்கிலம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| மேழம் | மேடம் | புஷ்யம் | புஷ்ய | மக | பௌஷ | பாஷ் | ரபி-வுல்-அவல் | சனவரி |
| விடை | இடவம் | மகம் | மகா | பல்குண | மக | மாக் | ரபி-அஸ்-சானி | பிப்ரவரி |
| இரட்டை | மிதுனம் | பல்குணம் | பல்குண | சைத்ர | பகன் | பால்குண் | ஜமா-திவுல்-அவல் | மார்ச்சு |
| கடகம் | கற்கிடகம் | சைத்ரம் | சைத்ர | வைசாக | சைத்ர | சைத்ர | ஜமாதி-அஸ்-சானி | ஏப்ரல் |
| மடங்கல் | சிங்நம் | வைசாகம் | வைசாக | ஜெயஸ்த | வைசாக் | பைசாக் | ரஜ்ஜப் | மே |
| கன்னி | கன்னி | ஜெயஸ்தம் | ஜெயஸ்த | ஆஷாட | ஜெய்த் | ஜெயஸ்த் | ஷா-அபன் | சூன் |
| துலாம் | துலாம் | ஆஷாடம் | ஆஷாட | சிராவன | ஆஷாட் | ஆஷார் | ரம்ஸான் | சூலை |
| நளி | விருச்சிகம் | சிராவனம் | சிராவன | பத்ர | சிராவன் | சிராபன் | ஷாவன் | ஆகஃச்ட் |
| சிலை | தனு | பத்ரபாதம் | பத்ரபாத | அஸ்வீன | பத்ரவூ | பத்ரா | ஜில்காத் | செப்டம்பர் |
| சுறவம் | மகரம் | அஸ்வீஜம் | அஸ்வீஜ | கார்த்திக | அஸ்வின் | அஸ்வின் | ஜில்ஹாஜா | அக்டோபர் |
| கும்பம் | கும்பம் | கார்த்திகம் | கார்த்திக | அக்ரஹாயன | கார்த்தெக் | கார்திக் | மொகராம் | நவம்பர் |
| மீனம் | மீனம் | மார்கஸீரம் | மார்க்கஸீர | பௌஷ | மார்கசிர் | அக்ரஹாயனு | சாஃபார் | திசம்பர் |

# நூலகம்

நூலகம் இலாதது பாழகம் ஆகும்!
நல்லறிவு அன்பு அங்கு சாகும்;
உடல் வேகும்!
ஒளி போகும்!
இருள் ஆகும்!

நூற்களைக் கண்டாலே அறிவு சிலிர்க்கும்!
நுகர்ந்திடா இன்பம் துளிர்க்கும்!
உயிர் களிக்கும்;
உளம் குளிக்கும்;
பிற புளிக்கும்!

அறிஞரின் உளமோ, அருந்துநீர்க் குளமாம்!
அன்றன்று நிறைந்திடும் உளமாம்!
முப் பழமாம்;
பெரு நலமாம்;
பின் வளமாம்!

செறிந்திடும் நூல்களால் சிறந்திடும் நாடும்!
செரித்திட உள்ளொளி கூடும்;
மெய் தேடும்;
கூத்தாடும்;
உயிர் பாடும்!

சுவடிச் சாலைகள் உளமலர்க் காடு!
சூழ்நெஞ்சம் கட்டுதேன் கூடு!
அறி வோடு;
நலந் தேடு;
தனி நாடு!

உவகைப் பெருங்கடல்! உலகச் சுருக்கம்!
உணர்வு பொழிந்தநீர்ப் பெருக்கம்!
மெய்த் தருக்கம்!
உள நெருக்கம்;
வாழ்வுச் சுருக்கம்!

வாடை நெஞ்சிற்கு வருத்திடா தீந் தழல்!
வாழ்க்கை வெயிற்கது குளிர்நிழல்!
இசைக் குழல்;
மேல் எழல்
ஒண் கழல்!

கூடை நினைவுகள் கொட்டிய கொப்பரை!
கூடாச் செயற்கது தப்பறை!
காவல் செப்பறை!
உயிர் துப்பறை;
குளிர் வெப்பறை!

-துரை-மாணிக்கம்-

தனித்தமிழ்ச் சொற்பட்டி-2.

## விளையாட்டுப் பெயர்கள்.

Boxing-குத்தாட்டம்

Cards play-அட்டையாட்டம், சீட்டாட்டம்.

Chess-சதுரங்கம்

Cricket-மட்டைப்பந்து, கட்டைப்பந்து.

Decipher-புதிர் அவிழ்ப்பு, புதிர் விடுவித்தல்

Dice பகடை.

Dodge-ball-ஏய்பந்து

Foot-ball-காற்பந்து.

Game-விளையாட்டு.

Golf-குழிப்பந்து.

Hop-Step-and Jump-தத்தி எட்டித் தாண்டல்

Hurdles-தடைதாண்டு ஓட்டம்.

Long Jump-நீளத்தாண்டல்.

Ping-Pong-முட்டைப்பந்து

Pole vault-கோல்தாண்டல்.

Polo-குதிரைப்பந்து

Table tennis-மேடைவரிப்பந்து

Tennikoit-வளையப் பந்து

Tennis-வரிப்பந்து.

Tug-of war-வடமிழுபோட்டி.

Volley-ball-எறிகைப்பந்து.

## "அறிந்து கொள்ளுங்கள்"

0 உலகில் உள்ள கடல்களில் செங்கடலில்தான் அதிக அளவு உவர்த்தன்மை உள்ளது என அறிவியலறிஞர்கள் கருதுகின்றனர்.

0 உலகிலேயே மிகவெப்பமான நீரை உடைய கடல் "பாரசீக வளைகுடா" ஆகும்.

0 ஆத்திரேலியாவிற்குக் கிழக்கே 2000 கல் தொலைவில், கடற் பரப்பிற்கு மேல் ஓர் எரிமலையின் முடி உயர்ந்து காணப்படுகின்றது. இதைத்தான் பால்கன் (Falkon) தீவு என வழங்குகின்றனர்.


0 ஓரிடத்தின் நிலவியல் அமைப்பை அறிய, முதன் முதலில் வானியல் அளவுகளைப் பயன்படுத்தியவர் "பிதியசு" ஆவார்.

0 வெப்பம் மிகுதியாக உள்ள செங்கடலில்தான் நீர் மிக விரைவில் ஆவியாகின்றது.

0 இருண்ட காட்டில் மின்மினிப் பூச்சி ஒளிவிடுவதைப் போல, கோடைக்காலத்தில் கடல் நீர்ப்பரப்பில் ஒளிப்பூச்சிகள் சில காணப்படுகின்றன.

## புதிர் விடைகள்

(1) செய்வார் (2) என்பதம் (3) நன்றல்லது (4) கேடெனின் (5) உடைத்திவ் வுலகு (6) கற்க கசடற (7) எய்து ப (8) எண்ணுவம் (9) மெய்வருத்த (10) பிறிதோர் சொல்.



## பெரியோர் கதை!

# விடுதலை மறவன் கரிபாலிடி

-பு. அ. மன்னர்மன்னன்.

இருபதாம் நூற்றுண்டின் இறுதியிலே இருக்கின்ற இன்றைய தமிழகத்தின் நிலையை எண்ணிப்பாருங்கள். இங்கே தமிழன் என்ற இனத்தையே வரலாற்றிலிருந்து நீக்க முயற்சி நடக்கிறதில்லையா? இதே போன்றுதான் பத்தொன்பதாம் நூற்றுண்டின் தொடக்கத்திலே இத்தாலியன் என்ற இனத்தையே அழித்துவிட இத்தாலியை ஆண்ட அயலவர்கள் முயன்றுர்கள். ஆனுல் அவர்களின் எண்ணம் தவிடு பொடியாகும் வண்ணம் அங்கே இனப்பற்றும், நாட்டுப்பற்றும் மிக்க "கரிபாலிடி" தோன்றினுர்.

அப்போது இத்தாலியின் ஒரு பகுதியை இத்தாலிய மன்னர் "சார்லசு ஆல்பர்ட்டு" என்பாரும், மற்றபகுதிகளை இசுபானியர்களும், ஆத்திரியர்களும். பிரெஞ்சுக்காரர்களும் ஆண்டு வந்தார்கள்.

இத்தாலியில் நைசு என்ற கடற்கரையை ஒட்டியுள்ள ஓர் ஊரில் 4-7-1807-இல் ஓர் ஏழை மீனவனுக்கு மகனுகக் கரிபாலிடி தோன்றினுர். வேளாளனுக மகனை உருவாக்க எண்ணினுர் தந்தை. ஆனுல் மகனின் தாளாண்மையோ கப்பற் பையன் ஆவதிலேயே இருந்தது. எனவே தம்முடைய பதினைந்தாம் அகவையிலேயே அவர் வீட்டைவிட்டு செனுேவாவுக்கு ஓடிவிட்டார். மகனின் மனமறிந்து தந்தையும் தடையெதுவும் பிறப்பிக்கவில்லை.

அடிமை இத்தாலியை விடுதலை பெறச் செய்வதில் மாசினி என்பாரும், இத்தாலிய மன்னரின் அமைச்சரான கவூர் என்பாரும் முயற்சி செய்தார்கள். ஆனுல் கவூர் கயமை நிறைந்தவர். கப்பற் பையனுக வேலைசெய்த கரிபாலிடி 'இளம் இத்தாலியர்" என்ற விடுதலை இயக்கத்தைப்பற்றிக் கேள்விப்பட்டார். விடுதலையில் நாட்டம் கொண்ட

கரிபாலிடி அதன் தலைவரான மாசினியைச் சந்தித்தார்; தம்மையும் அதில் சேர்த்துக்கொள்ளும்படி கேட்டுக்கொண்டார். கரிபாலிடியின் திறமையறிந்து மாசினியும் அவருக்குத் தகுந்த இடத்தை அளித்தார்

மக்களைப் பெரிதும் ஏமாற்றத்திற்குள்ளாக்கி வைத்திருந்த இத்தாலிய மன்னரைத் தாக்க இயக்கம் திட்டமிட்டது. செனேவா செல்லும்படி கரிபாலிடிக்குக் கட்டளை யிடப்பட்டது. ஆனால் தாக்குதலில் இயக்கம் தோல்வியுறவே, கரிபாலிடி வேளாளர் வேடமணிந்து 1836-இல் தென்அமெரிக்கா தப்பிச் சென்றார். அங்கே இத்தாலியர்களைக் கொண்ட "செஞ்சட்டை இயக்கத்"தைத் தோற்றுவித்தார்.

ஆத்திரியர்களை விரட்டுவதில் நாட்டம் கொண்டிருந்த இத்தாலிய மன்னர் தம்மேல் உள்ள பகையை மறந்து தமது உதவியை நாடுவார் எனக் கரிபாலிடி எண்ணினார். எனவே 3-7-1848-இல் தம் நாடு வந்தடைந்து மன்னனிடம் தம் உதவியை ஏற்றுக்கொள்ளும்படி வேண்டினார். மன்னர் அவரை மதிக்காத போதிலும், தாமாகவே 3000 பேர்கொண்ட படை அமைத்து ஆத்திரியர்களை விரட்டும் முயற்சியில் ஈடுபட்டார். அதில் அவர் தோல்வியே கண்டாரெனினும் மக்கள் மனத்தில் விடுதலை உணர்வை உண்டாக்குவதற்கு இப்போர் வழிசெய்தது. இந்நிலையில் அவர் சுவிட்சர்லாந்து தப்பிச் சென்றார்.

ஆத்திரியர்களை விரட்டுவதில் தோல்விகண்ட மன்னன், ஆட்சியை மகன் இம்மானுவேல் கையில் ஒப்படைத்து உயிர் துறந்தார். இந்நிலையில் உரோம் நகரத்தை மாசினி கைப்பற்றி நல்லதோர் ஆட்சி நடத்தி வந்தார். இதைக் கேள்வியுற்ற கரிபாலிடி இதுவே சமயம் என இத்தாலி நோக்கிப் படை கொண்டுவந்தார். ஆனால் 9 திங்களே மாசினியின் ஆட்சி அங்கு நிலைத்தது. எனினும் கரிபாலிடியின் படை முதலில் பிரெஞ்சுக்காரர்களைத் தாக்கி வெற்றி கண்டது. ஆனால் மாசினி வெற்றியை மேலும் அடையவொட்டாமல் பொறுக்க இயலா மாபெரும் தவறிழைத்து விட்டார். எனவே இறுதியில் தோல்வி காணும் நிலையைப் படைகண்டது. அடிபணிவதா, மலைகளுக்குள் ஓடி ஒளிவதா, அல்லது போரிட்டு மடிவதா, எனப் படை எண்ணமிட்டது அடிபணிவதைப்பற்றி அறவே எண்ணாத கரிபாலிடி இல்லாத வேளையில், அடிபணிவதெனக்கூட்டம் முடிவுசெய்தது. உடனிருந்த மாசினியால் இதைத்தடுக்க இயலாமல் சிறை செல்வதே சிறந்ததெனச்சிறைப்பட்டார்.

முடிவுகண்டு கலங்கிய கரிபாலிடி கடுஞ்சினமுற்று "மான மிழந்த இத்தாலியர்களே! இதோ வெற்றியை நோக்கிச்செல்லும் என் பின்னே வருபவர்கள் வாருங்கள். அவர்களுக்கு என்னால் எவ்விதச் சம்பளமும் தர இயலாது; உணவு கிடைத்த இடத்தில்தான் உண்ண வேண்டும்" என முழக்கமிட்டார். ஐயாயிரவர் அவர்பின் நின்றனர்.

நகருக்குள் நுழைந்த பிரெஞ்சுக்காரர்களுடன் இப்படை கடும் போரிட வேண்டியிருந்தது. அடிபணிபவருக்கு அமெரிக்கா செல்லும் சலுகை கிடைக்கும் என்றவுடன் மேலும் பல கரிபாலிடியினர் அடி பணிந்தனர். எஞ்சி இருந்த இருநூற்றுவருடன் 13 படகுகளில் வெனிசுக்குத் தப்பிச் செல்ல முயன்றார். ஆனால் வழியில் 9 படகுகள் கைப்பற்றப்பட்டன. தப்பிய நான்கு படகுகளுடன் கரிபாலிடி ஐரோப்பா சென்று, அடைக்கலம் அங்குக் கிடைக்காமையால் அமெ ரிக்கா சென்றார்.

அங்கிருந்துகொண்டே பொருள் திரட்டி இத்தாலிக்கருகில் காப்ரேரா என்னுமிடத்தில் பண்ணையொன்றமைத்து, வாழ்ந்து வந் தார். காலம் கருதியிருந்த கரிபாலிடி 1859-இல் மீண்டும் உரிமைப் போரில் பங்குகொண்டார். இம்மானுவேலின் அமைச்சரான கவூரின் முயற்சியால், பிரெஞ்சு மன்னர் நெப்போலியன் துணையுடன் ஆத்திரி யர்களை விரட்டுவதில் மன்னர் முயன்றார். கவூரின் கயமைத்தனம் கரிபாலிடிக்குப் பிடிக்காதெனினும், ஐயாயிரவர் கொண்ட தம்மு டைய படையுடன் ஆத்திரியர்களை விரட்டுவதில் துணை நின்றார். ஆனால் கைம்மாறாக கவூர் நெப்போலியனுக்குக் கரிபாலிடியின் பிறப் பிடமான "நைசை"யே கொடுத்து விட்டார்.

சிசிலி மக்களும் விடுதலையை விரும்பிக் கரிபாலிடியின் துணையை நாடினர். கரிபாலிடியின் படை பன்னீராயிரமாகப் பெருகியது. கரிபாலிடியின் வெற்றிகளைவிரும்பாத கவூர், வெற்றியைத் தடுக்க இடையூறு பல செய்திடினும் முடிவில் வெற்றியையே கரிபா லிடி பெற்றார்.

மன்னர் இம்மானுவேலும் கவூரின் கயமைத் தனத்துக்கு உட் பட்டு வெற்றிபெற்ற கரிபாலிடியை வரவேற்பதற்கு மாறாக, இறு மாப்புடன் ஏளனம் செய்யத் தலைப்பட்டார். உள்ளம் குமுறிய கரிபா லிடியினர் மன்னரை எதிர்க்கத் துணிந்தனர் கரிபாலிடி அவர்களைக் கையமர்த்தி, மன்னரைக் காத்தார். முடிவில் கரிபாலிடிக்கு மன்னர் தக்க வகையில் மதிப்பளித்தார்.

# யானை

-இளஞ்சித்திரன், தஞ்சை.

க. கரியது யானை
பெரியது யானை
கண்கள் மணிபோல் சிறுத்தது;
கால்கள் தூண்போல் பருத்தது.

உ. ஒருகை யானை
துதிக்கை யானை
உலவும் மலைபோல் இருப்பது;
முறம்போல் செவிகள் அசைப்பது.

ந. பிளிறிடும் யானை
வலியது யானை
மரங்களை முறித்துப் பெயர்ப்பது;
கரும்புகள், கனிகாய் சுவைப்பது.

ச. களிறெனும் யானை
பிடியெனும் யானை
கொம்பிரண் டுடனே நடப்பது
கொடிய காட்டினில் கிடப்பது.

களிறு—ஆண் யானை.
பிடி—பெண் யானை.

---

(முன்பக்கத் தொடர்ச்சி)

வெற்றி கிட்டிய நேரத்திலும் அடக்கம் மிகக் கொண்டவராய்க் கரிபாலிடி எவ்வகைப் புகழுரைகளையும், பொருள்களையும் ஏற்றுக் கொள்ள மறுத்துத் தம்முடைய பண்ணைக்குத் திரும்பினர். அங்கிருந்து கொண்டே ரோம் நகரைக் கைப்பற்ற 1862-இலும், 1867-இலும் முயன்றார். முடிவில் 1871-இல் உரோம்நகர் கைப்பற்றப் பட்டது.

*"எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்*
*திண்ணிய ராகப் பெறின்"*

என்ற வள்ளுவர் வாய்மொழிக்கிணங்க இத்தாலி முழுமையையும் விடுதலை பெறச் செய்தார் கரிபாலிடி. இந்த விடுதலை அரிமா கரிபாலிடி தம்முடைய 75-ஆம் அகவையில் மறைந்து போனர். அவர் புகழ் என்றும் நிலைப்பதாக!

# தமிழ்நாட்டில் பயிர்த்தொழில்.

"தனிமுதல்வன்"

[தமிழ்நாட்டின் முகாமையான விளைபொருள்கள் பயிரிடப்படும் நிலத்தின் அளவுகள்.]

| | | |
|---|---|---|
| நெல் | 54,44,530. | குறுக்கம் (ஏகர்) |
| கம்பு | 13,36,990 | ,, |
| கோதுமை | 3,940 | ,, |
| மக்காச் சோளம் | 15,630 | ,, |
| கேழ்வரகு | 8,81,960 | ,, |
| மிளகாய் | 1,49,870 | ,, |
| கரும்பு | 1,28,100 | ,, |
| வாழை | 73,310 | ,, |
| மா | 60,020 | ,, |
| சருக்கரை வள்ளி | 11,840 | ,, |
| வெங்காயம் | 29,660 | ,, |
| மணிலா | 18,79,330 | ,, |
| தென்னை | 1,26,240 | ,, |
| எள் | 3,38,040 | ,, |
| ஆமணக்கு | 28,760 | ,, |
| குளம்பி (காபி)ச்செடி | 51,620 | ,, |
| தேயிலை | 28,308 | ,, |
| பருப்பு வகை | 10,93,580 | ,, |
| பருத்தி | 10,40,890 | ,, |
| புகையிலை | 43,780 | ,, |
| உருளைக்கிழங்கு | 21,620 | ,, |


## தமிழ்ச்சிட்டு, கடலூர்-1

(தனித்தமிழ் சிறுவர் கலையிதழ்)

### மாற்றப்பட்ட உறுப்பினர் கட்டணங்கள்.

| | | உள்நாடு. | வெளிநாடு, | கொழும்பு. |
|---|---|---|---|---|
| ஆண்டுக்கட்டணம் | உருபா | 3-00 | 5-50 | 4-00 |
| தனியிதழ் | ,, | 0-25 | 0-45 | 0-35 |

(அரையாண்டுக் கட்டணம் இல்லை)

ஓரிதழுக்கு 50 காசு மேனி முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க!

# பயன்மொழிகள்

தொகுப்பு: புலவர். சி. இராமசாமி, தத்தனூர்.

அறிவுதான் மாந்தனை விடுதலை செய்யும்.
—மார்க்சிம் கார்க்கி

நாளை என்பது சோம்பேறிகளின் நாள். —பாபு ராவ்

நெஞ்சத்தின் ஆழத்திலிருந்து எழுந்த சொற்களே நெஞ்சத்தை இழுக்கின்றன —குன்றக்குடி அடிகளார்

வறுமையைவிட ஊதாரித்தனம் கொடியது! —சிங்-சௌ

கற்புடைய பெண் அமிழ்தம்! —சிறுபஞ்சமூலம்

குழந்தையைத்தூக்கிவைத்துக்கொள்ளக் கைநோகிறது; அதைக் கீழே இறக்கினால் மனம் நோகிறது! டெனிக்கிலான்

வாழ்க்கையின் சிறந்த காலம் என்று சொல்லத் தக்கது குறிக்கோள்களில் வெற்றிகொண்ட நாட்களைக் குறிக்காது; மாறாக மாந்தன் ஏமாற்றத்தாலும் வருத்தத்தாலும் தாக்கப்படும்போது 'வெற்றி பெறுவோம்' என்று நம்பிக்கையுடன் எதிர்த்துப் போராடும் நாட்களே! —கச்டாவ் ஃப்ளாபெட்

# தமிழ்ச்சிட்டே!

1 தமிழர் வீட்டுக் கதவெல்லாம்
தட்டும் தூய தமிழ்ச்சிட்டே!
அமிழ்தை வாரி வருகின்றாய்
அறிவை வளரச் செய்கின்றாய்!

2. நாளைய தமிழர் தலைமுறைக்கு
நல்வழி காட்டும் திருவிளக்கே!
'வேளை இதுநாம் விழிக்க'வென
வேண்டிய வெல்லாம் விளக்கின்றாய்!

3. தலித்தமிழ் இன்பம் கூட்டுகிறாய்;
தலைமை பெறும்வழி காட்டுகிறாய்!
இனித்தமிழ் நாடும் என்றமிழும்
ஏற்றம் பெறும்;இழுக் கெய்தாவே!

4. தாயே போலத் தண்ணருளைத்
தன்னல மின்றிப் பொழிவதிலே
நீயே உனக்கு நிகராவாய்!
நிலமிசை வாழி நீடுழி!!

—புத்திரங்கோட்டை சா. நடராசன்.

# நினைவில் வையுங்கள்!

எண்ணம் மூட நம்பிக்கையின் எதிரி. —சேக்சுபியர்

சமயம் நினைவுக் குவியலின் ஒரு துறை. —மாக்சுமுல்லர்

யாரொருவர் தம்மைப்பற்றி மிதமிஞ்சி நினைத்துக்கொள்கிறாரோ அவர் வீழ்ச்சிக்கு அந்த நினைப்பே காரணம். —சேக்சுபியர்

அறிவுள்ள பித்தனுக்கு மறு பெயர் என்ன? மெய்யறிவாளன் —போடன்கீம்

பெருமை பிறரைப் புகழ வைப்பதாலா இருக்கிறது? இல்லை, பிறருடன் போராடுவதில். —மில்னசு

எதிர்காலத்தை விலைக்கு வாங்கிவிட முடியுமா? முடியும். நிகழ் காலத்தில் ஒழுங்காக வாழ்ந்துவிட்டால். —சான்சன்

மாந்தன் புகழை எப்போது இழக்கிறான்? தன் புகழைக் காத்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் தோன்றும்போது! —தாம்

இறப்பு வரும் வரையில் எல்லாம் வாழ்க்கைதான்.
—இசுப்பெயின் பழமொழி

நன்றாக வாழ்வதற்குக் குறைந்த வாழ்வே போதுமானது.
—இலத்தீன் பழமொழி

உயிரை விட்டுவிடும் ஈகத்தைவிட உயிர் வாழ்க்கையை ஈகம் செய்வதே கடினம். அதற்கே மிகுந்த வல்லமை தேவை.
—ஒரேசுமான்

புத்தகம் இல்லாத வீடும் பலகணி இல்லாத வீடும் ஒன்றே
—சிங்செள

ஒரு மாந்தனுடைய செயல்தான் அவனுடைய பெருமை அல்லது சிறுமையின் உரைகல்! —இந்தியப் பழமொழி

தேவையானதை யெல்லாம் வாங்காதே. தவிர்க்க முடியாததை மட்டும் வாங்கு. —சுவிட்சர்லாந்து பழமொழி

உடலும் உள்ளமும் கெடுவதற்குக் காரணம் வாய்தான்!
போர்னியா பழமொழி

வீழ்வது வெட்கமல்ல. வீழ்ந்து கிடப்பதுதான் வெட்கமானது.
—சுவீடன் பழமொழி

நன்மொழி கூறலும் ஒருவித நற்செயலே. ஆயினும் மொழிகள் செயல்கள் ஆகா. —சேக்சுபியர்

இனிய அருளே பெருந்தன்மையின் அடையாளமாகும்.
—சேக்சுபியர்

---

தொகுப்பு: எ. கலியபெருமாள், வெள்ளாளகுண்டம்.




தம்பி, கீழ்க்காணும் 10 குறட்பாக்களும் உனக்குத் தெரிந்தவை தாம். இருப்பினும் அவை ஒவ்வொன்றிலும் ஒவ்வோர் பிழை உள்ளது. அப்பிழைகள் எவை என்பதைத்திருக்குறள் நூலை ஒப்பிட்டுப்பார்க்காமலேயே உன்னால் சொல்ல முடியுமா என்று முயன்று பார். பத்துக் குறள்களில் உள்ள பிழைகளையும் கண்டுபிடித்து விட்டால் எந்த நூலையும் மிகவும் சரியாகப் படிக்கும் பழக்கம் உன்னிடம் உள்ளது என்று பொருள். இல்லையானால் வெறும் நுனிப்புல் மேயும் பழக்கமே உன்பால் உள்ளதெனக் கருதிக்கொள். எங்கே, முயற்சி செய்:

1. செயற்கரிய செய்வர் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்.

2. குழலினிது யாழினி தென்பர்தம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர்.

3. நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
அன்றே மறப்பது நன்று.

4. ஒப்புரவி னால்வரும் கேடெனினும் அஃதொருவன்
விற்றுக்கோள் தக்க துடைத்து.

5. நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை பிறங்கிற் றுலகு.

6. கற்கக் கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.

7. எண்ணிய எண்ணியாங் கெய்துவர்; எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்,

8. எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவ தென்ப திழுக்கு.

9. தெய்வத்தான் ஆகா தெனினும் முயற்சிதன்
மெய்வருந்தக் கூலி தரும்.

10. சொல்லுக சொல்லைப் பிறிதொருசொல் அச்சொல்லை
வெல்லும்சொல் இன்மை அறிந்து.

(விடை 8-ஆம் பக்கம் பார்க்க)

# பன்னிரண்டு சைவத் திருமுறைகள்.

திருஞானசம்பந்தர் பாடிய தேவாரப் பாடல்களை முதல் மூன்று திருமுறைகளாகவும், திருநாவுக்கரசர் பாடிய பாடல்களை நான்கு, ஐந்து, ஆறுந்திருமுறைகளாகவும், சுந்தரமூர்த்திநாயனுர் பாடிய தேவாரப் பாடல்களை ஏழாந்திருமுறையாகவும், மாணிக்கவாசகர் பாடிய திருவாசகம், திருக்கோவையார் இரண்டையும் எட்டாந்திரு முறையாகவும், திருமாளிகைத்தேவர், கருவூர்த்தேவர், பூந்துருத்தி நம்பி, கடாநம்பி, கண்டராதித்தர், வேணுட்டடிகள், திருவாலியமுதர், புருடோத்தம நம்பி, சேதிராயர், ஆகியோர் பாடிய திருவிசைப்பாப் பதிகங்கள் இருபத்தெட்டும், சேந்தனுர் பாடிய திருப்பல்லாண்டு பதிகம் ஒன்றும் சேர்ந்து இருபத்தொன்பது பதிகங்களையும் ஒன்பதாந் திருமுறையாகவும், தமிழ்மூவாயிரம் என்னும் திருமூலரின் திருமந்திரத்தைப் பத்தாந் திருமுறையாகவும், நம்பியாண்டார்நம்பி திருஞானசம்பந்தர்மேல் பாடிய திருவந்தாதி, திருசண்பகை விருத்தம், திருமும்மணிக்கோவை, திருவுலாமாலை, திருக்கலம்பகம், திருத்தொகை ஆகியவற்றையும், திருநாவுக்கரசர் மேல்பாடிய திருவேகாதசமாலையையும் பதினேராந்திருமுறையாகவும், சேக்கிழாரின் திருத்தொண்டர் புராணத்தைப் பன்னிரண்டாம் திருமுறையாகவும் வகுத்துள்ளனர்.

---

# உறுப்பினர்கள் கவனிக்க

தாள்விலை உயர்வு காரணமாகவும் மற்ற அச்சுத்துறைப் பொருட்களின் விலையேற்றம் காரணமாகவும் தமிழ்ச்சிட்டு குரல்-4 இசை 1 முதல் தனியிதழின் விலை 25 காசாகவும், உறுப்பினர் ஆண்டுக் கட்டணம் உருபா 3/- ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளன. அன்பர்கள் இக்கட்டண உயர்வைப் பொருட்படுத்தாமல் தங்கள் மேலான ஒத்துழைப்பைத் தொடர்ந்து நல்குவர் என நம்புகிறோம்.

முன்னமே உறுப்பினர் கட்டணம் விடுத்தவர்களை இக்கட்டண உயர்வு கட்டுப்படுத்தாது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

அமைச்சர்.

# அமெரிக்காவில்!

0 அமெரிக்காவில் உள்ள பள்ளிகளில் ஆசிரியர்களாகவும், பேராசிரியர்களாகவும் பணியாற்றுபவர்களில் 70 விழுக்காடு பெண்களே யாவர்.

0 அமெரிக்காவில் உள்ள இலக்கியப் பேரறிஞர்களில் அனைத்துலகப் புகழ் பெற்றவர் "வாசிங்குடன் இர்விங்கு" (Washington Irving) ஆவார்.

0 அமெரிக்காவில் கண்டுபிடிக்கப்பட்ட புத்தம் புதிய மூலப் பொருள்கள் மட்டும் 92-க்கும் மேற்பட்டவையாகும்.

0 அமெரிக்காவில் வெளியாகும் தாளிகைகளில் மிகுதியான படிகள் விற்பனையாகும் தாளிகை "நியூயார்க்குச்செய்திகள்" (Newyork News) ஆகும்.

0 அமெரிக்காவின் மொத்த நிலப்பரப்பில் 60 விழுக்காடு விளைச்சலுக்கேற்ற பண்ணை நிலமாக உள்ளது.

0 அமெரிக்காவின் குறுக்களவில் உந்து வண்டியிலோ அல்லது தொடர் வண்டியிலோ பயணம் செய்வதற்கு நான்கு நாட்கள் ஆகும்.

0 அமெரிக்காவில் திருமணமான பெண்கள் 40 விழுக்காட்டிற்குமேல் தங்கள் இல்லங்களைவிட்டு வெளியில் சென்று, அலுவலகங்களில் பணிபுரிகின்றனர்.

0 அமெரிக்காவில் நடைபெறும் வாணிகத்தில் 90 விழுக்காட்டிற்கும் மேல் "காசோலை" (Chcque) மூலம் நடைபெறுகின்றது.

0 அமெரிக்காவின் மொத்த நிலப்பரப்பில் காட்டுப்பகுதி மூன்றிலொரு பங்கு ஆகும். இஃது உலகில் உள்ள காடுகளின் பரப்பில் 9 விழுக்காடாகும்.

0 அமெரிக்காவில் ஆங்கில மொழித் தாளிகைகள் மட்டும் 10,455 வெளியாகின்றன. இவ்வெண்ணிக்கை உலகம் முழுவதும் வெளியிடப்படும் ஆங்கிலமொழித் தாளிகைகளில் ஐந்திலொருபங்கு ஆகும் (அ. மா. விசயகுமார் புதுவை-1)

தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1,